வணிகக்கல்வி

போக்குவரத்தும் வழங்கல் சேவையும்

e தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சிமட்டம் - 10.2 :- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான போக்குவரத்து முறையினையும் போக்குவரத்து ஊடகத்தையும் தெரிவு செய்வர்.

பின்வரும் சந்தர்ப்பங்களில் தெரிவு செய்ய வேண்டிய பொருத்தமான போக்குவரத்து ஊடகம் எது எனக் குறிப்பிடுக.

சந்தர்ப்பம்	பொருத்தமான போக்குவரத்து ஊடகம்.
1. யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு மீன், இறால் என்பவற்றைக் கொண்டு செல்லல்.	
2. அனுராதபுரம் வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நோயாளரொருவரை கொண்டு செல்லல்.	
3. அவுஸ்திரேலியாவிலிருந்து அப்பிள் பழத்தை இலங்கைக்கு கொண்டு வருதல்.	
4. கொழும்பிலிருந்து அமெரிக்காவிற்கு மலர்களைக் கொண்டு செல்லல்.	
5. ஹம்பாந்தோட்டையிலிருந்து பதுளை நகரத்தின் விற்பனை நிலையத்திற்கு தயிர் எடுத்துச் செல்லல்.	
6. சீனாவிலிருந்து ஒரு தொகுதி அரிசியினை இலங்கைக்கு கொண்டு வருதல்.	
7. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பெற்றோல் கொண்டு வருதல்.	
8. குறித்த பாடசாலையின் க.பொ.த உயர்தர மாணவர்கள் 10 பேரை சுற்றுலா அழைத்துச் செல்லல்.	
9. அதிகளவு பயணிகளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்லல்.	
10. 20 பேர்கொண்ட கிரிக்கெற் அணியினர் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு செல்லல்	

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றைத் தெரிவு செய்யும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்.

01 பொருளின் தன்மை

இங்கு பொருளின் தன்மை, நீடித்த தன்மை, நிறை, பெறுமானம் போன்ற காரணிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் போக்குவரத்து ஊடகம் வேறுபடும்.

Eg:

1. மரக்குற்றிகளை எடுத்துச் செல்வதற்காக லொறி பயன்படுத்தப்படும்.
2. மீன் வகைகளை எடுத்துச் செல்வதற்காக குளிரூட்டப்பட்ட வாகனம் பயன்படுத்தப்படும்.

02 கிரயம்

போக்குவரத்திற்காக ஏற்படும் மொத்தச் செலவே கிரயம் எனப்படும். போக்குவரத்துக் கிரய அதிகரிப்பானது பொருளின் விலையை அதிகரிப்பதற்கு காரணமாக அமைவதனால் மிகவும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

03 விரைவு/வேகம்

பழுதடைதல், தரம் குறைவடைதல் காரணமாக சில வகை மூலப் பொருட்களையும் முடிவப்பொருட்களையும் மிக விரைவாக கொண்டு செல்ல வேண்டியது அவசியமானதாகும்.

Eg: மீன், மரக்கறி, பழவகை, தயிர்.

விரைவான போக்குவரத்து மூலம் செலவிடப்படும் காலம் குறைவடைவதால் போக்குவரத்து வினைத்திறனாக அமையும்.

04 தூரத்தின் அளவு

தூரத்தின் அளவிற்கேற்பவும தெரிவு செய்யப்படும் ஊடகம் வேறுபடும். ஊடகத்திற்காகச் செலவாகும் கிரயமும் வேறுபடும்.

05 கொள்ளளவு/இயலளவு

போக்குவரத்து ஊடகமொன்றின் மூலம் ஒரு தடவைக்கு கொண்டு செல்லக் கூடிய பொருட்கள் மற்றும் பிரயாணிகளின் அளவு கொள்ளளவு ஆகும். கொண்டு செல்வதற்கு எதிர்பார்க்கும் அளவிற்கேற்ப பொருத்தமான ஊடகமொன்றைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

06 பாதுகாப்பானது

எடுத்துச் செல்லப்படும் பொருள் அல்லது பிரயாணிகள் பாதுகாப்பாகப் பயணம் முடியும் வரையில் கொண்டு செல்லக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

Eg: நோயாளர்களைக் கொண்டு செல்வதற்காக அம்புலன்ஸ் வாகனத்தைப் (நோயாளர் விரைவு வண்டி) பயன்படுத்தல்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

போக்குவரத்தின் நவீன போக்குகள்.

☺ சுரங்க வழிப்போக்குவரத்து.

☺ அதிவேகப் பெருந்தெருப் போக்குவரத்து.

☺ மேம்பாலங்களை அமைத்தல்.

☺ மின்சார மோட்டார் வண்டிகளைப் பயன்படுத்தல்.

☺ சூழலுக்குத் தீங்கிளைக்கா வலு வகைகளைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படல்.

Eg: மரக்கறி, பழவகைகளினால் எண்ணெய் உற்பத்தி செய்தல்.

☺ தான் இருக்குமிடத்திற்குப் போக்குவரத்து ஊடகத்தை கொண்டுவரச் செய்ய முடிதல்

போக்குவரத்துத் துறையின் எதிர்கால எதிர்வு கூறல்கள்.

- ஹய்பர் லூப் எண்ணக்கரு

  பிரித்தானிய நாட்டவரான இபாலான் மயிக்கின் “ எதிர்கால உலகப் போக்குவரத்து முறை” என இனங் காணப்படுகின்ற எண்ணக்கருவாகும். பிரதானமாக குழாயினூடாக ஏற்படுத்தப்படும் சக்தியொன்றைப் பயன்படுத்தி பொருட்கள் மற்றும் தனிநபர்கள் கொண்டு செல்லப்படுவர்.

- Walk car, Air wheel

  கால்நடைக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய மிகச் சிறிய உபகரணங்களாகும்.

ஒப்படை

- போக்குவரத்து முறைகள் நான்கையும் குறிப்பிட்டு அம்முறைகளில் பயணிக்கும் ஊடகங்களைப் பட்டியற்படுத்துக.
- அவ்வூடகங்கள் பயன்படுத்தும் எரிபொருள் வகைகளைத் தனித்தனியாகச் சுட்டிக் காட்டுக.
- அவ்வூடகங்கள் நிறுத்தி வைக்கப்படும் தரிப்பிடங்களைத் தருக.
- போக்குவரத்து பின்வரும் ஒவ்வொரு பிரிவினர்களுக்கும் முக்கியத்துவம் பெறும் முறையினை விளக்குக.
  1. வணிகர்களுக்கு
  2. தனிநபர்களுக்கு.
- போக்குவரத்து முறையினை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு உங்களால் முன்மொழியப்படும் ஆலோசனைகளை முன்வைக்கவும்.

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பயிற்சி
பகுதி - I

1. பின்வருவனவற்றுள் போக்குவரத்து முறைமையுடன் தொடர்புடைய சரியான கூற்று எது?

I. பேருந்து நிலையமானது போக்குவரத்து தரிப்பிடத்தின் ஒரு கூறு ஆகும்.
II. புகையிரதப் பாதையானது போக்குவரத்து முறைமையின் ஒரு கூறு ஆகும்.
III. ஆகாய விமானமானது போக்குவரத்துப் பாதையின் ஒரு கூறு ஆகும்.
IV. கப்பலானது போக்குவரத்துப் பாதையின் ஒரு கூறு ஆகும்.
V. துறைமுகமானது போக்குவரத்து முறைமையின் ஒரு கூறு ஆகும்.

2. புகையிரதப் போக்குவரத்து, வீதிப் போக்குவரத்து ஆகியவற்றின் அனுகூலங்களைக் குறிக்கும் கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A– பாரப் பொருட்களை ஏற்றியிறக்கும் திறன்
B– கட்டணம் குறைவாக இருத்தல்
C– எவ்வேளையிலும் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்
D– அதிவேகம்
E– கவனத்துடன் பொருட்களை போக்குவரத்துச் செய்யும் திறன்.
வீதிப்போக்குவரத்துடன் ஒப்படும்போது புகையிரதப் போக்குவரத்தில் மட்டுமுள்ள நன்மைகளை குறிக்கும் கூற்றுக்கள்.

I. ADE II. BCD I II. ABD IV. CED V. ABC

3. கொழும்பு துறைமுகத்திலிருந்து சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்ததிற்கு எரி-பொருளைக் கொண்டு செல்வதற்கு மிகப் பொருத்தமான போக்குவரத்து ஊடகங்கள்?

I. டிரக் வண்டிகள், சுரங்கப்பாதைகள் மற்றும்புகையிரதம்.
II. கப்பல்கள், புகையிரதம் மற்றும் டிரக் வண்டிகள்.
III. புகையிரதம், கப்பல்கள் மற்றும் சிறிய ஆகாய விமானங்கள்.
IV. குழாய்வழி, புகையிரதம் மற்றும் பௌசர்கள்.
V. குழாய்வழி, பௌசர்கள் மற்றும் சிறிய ஆகாய விமானங்கள்.

4. போக்குவரத்தின் அடிப்படை அம்சம் அல்லாதது?

I. ஊடகம். II. செய்தி III. வழி IV. சக்தி V. தரிப்பிடம்

5. போக்குவரத்து ஊடகமொன்றின் மூலம் ஒரு தடவைக்குக் கொண்டு செல்லக்கூடிய பொருட்கள் மற்றும் பிரயாணிகளின் அளவு ..... ஆகும்

6. போக்குவரத்துக் கிரய அதிகரிப்பானது பொருளின் விலையை ..... காரணமாக அமைகின்றது

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

7. பொருளாதார ..... விருத்தியிலும் ..... முக்கிய கருவியொன்றாகப் போக்குவரத்து காணப்படுகின்றது

8. பொருட்களின் ....., ... என்பன போக்குவரத்தின் காரணமாகவே வேறுபட்ட இடங்களில் நிகழ்கின்றது.

9. ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பொருட்களை மட்டுமன்றி பிரயாணிகளையும் இடம் நகர்த்தும் செயற்பாடு ..... எனப்படும்.

10. வேகம் கூடியதும் போக்குவரத்துக் கட்டணம் உயர்வாக உள்ளதுமான போக்குவரத்து வழி ..... ஆகும்.

பகுதி - II

1. வணிகர் ஒருவர் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைக்குக் கொண்டு செல்வதற்கு பொருத்தமான போக்குவரத்து முறையொன்றினைத் தெரிவு செய்யும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய 4 விடயங்களைக் குறிப்பிடுக.
2. இலங்கையின் பெருந்தெரு பயணிகள் போக்குவரத்தினை மேம்படுத்த அண்மைக்காலத்தில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?
3. மரக்கறி வகைகளையும் பழங்களையும் ஏற்றிச்செல்வதில் புகைவண்டி மற்றும் நெடுஞ்சாலைப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை, தீமைகளை ஒப்பிடுக.
4. அண்மைக் காலமாக இலங்கையில் வீதி விபத்துக்கள் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனைத் தடுப்பதற்கான தீர்வுகளினை முன்வைக்குக.
5. வடக்கிற்கான புகையிரதப் பாதை அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதி வணிகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.
6. பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையைப் பயன்படுத்துவதன் மூலம் பொருட்களுக்கான போக்குவரத்தின் போது வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டு தருக.
7. ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு போக்குவரத்தின் வகிபாகத்தை விளக்குக.
8. அதிவேக நெடுஞ்சாலை வலைப்பின்னல் அபிவிருத்தியின் காரணமாக வணிகத்துறையில் ஏற்படக்கூடிய பல்வேறு மாற்றங்களை விளக்குக
9. அண்மைக் காலங்களில் போக்குவரத்துத்துறை அபிவிருத்தியடைந்து வருகின்றது. இவ்வாறான நவீன போக்குகள் யாவை?
10. “ வணிக வளச்சிக்காக வீதி அபிவிருத்தியிலும் பார்க்க புகையிரதப் பாதையை அபிவிருத்தி செய்வது மிகவும் அனுகூலமானது.” இக்கூற்று தொடர்பாக ஆதரவாகவும் எதிராகவும் நீர் முன்வைக்க எதிர்பார்க்கும் இரண்டு கருத்துக்கள் வீதம் விபரிக்க.

தொகுப்பு : திருமதி.வி.செல்வகுமார், ஆசிரியர் - வணிகக்கல்வி, (யா/நாவற்குழி ம.வி - கைதடி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk